# நிதித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண். 16

**2018 – 2019**

**ஓ. பன்னீர்செல்வம்**
துணை முதலமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2018

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | 1-13 |
| 2. | கருவூலக் கணக்குத் துறை | 14-24 |
| 3. | உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை | 25-46 |
| 4. | கூட்டுறவு தணிக்கைத் துறை | 47-55 |
| 5. | சிறு சேமிப்புத் துறை | 56-66 |
| 6. | அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் | 67-73 |
| 7. | அரசுத் துறை - நிறுவனத் தணிக்கைத் துறை | 74-82 |

# கொள்கை விளக்கக் குறிப்பு
# மானியக் கோரிக்கை எண்.16

# நிதித் துறை

## 2018-2019 ஆம் ஆண்டிற்கான
## கொள்கை விளக்கக் குறிப்பு

**முகவுரை:**

“ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி”

- 477

திறமையான பொது நிதி நிர்வாகம் என்பது அரசுக்கு சேரவேண்டிய வருவாயை முறையாக திரட்டுவதும் அத்தகைய நிதி ஆதாரங்களை விரயம் இன்றி பயன்படுத்திப் பொதுமக்களின் நலன் பேணி, அடிப்படை வசதிகளை பெருக்கி, தரமான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி நாட்டினை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும். எனவே, நிதி ஆதாரங்களைப் பொதுமக்களின் நலன் பேணுவதற்காகச் சிறந்த முறையில் பயன்படுத்தி, பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவித்து தமிழ்நாட்டை சமூகப் பொருளாதார வளர்ச்சி பெற்ற, வளமையான

மாநிலமாக உருவாக்குவதையே இந்த அரசு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

2. அரசு செயல்படுத்தும் திட்டங்களுக்கும், அறிவிக்கும் வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களுக்கும் போதிய நிதியொதுக்கம் செய்யப்படுவதை நிதித்துறை உறுதி செய்கிறது. திறமையான நிதி மேலாண்மையின் மூலம், அரசின் சேவைகள் மற்றும் திட்டங்களின் பயன்கள் தொய்வின்றி மக்களுக்கு முறையாகச் சென்றடைவதையும், அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுவதையும் உறுதிசெய்து மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் இத்துறை வழிவகுத்து வருகிறது.

3. நிதித்துறையின் முக்கியப் பணிகள்:

(i) மாநிலக் கருவூலத்தை நிருவகித்தல்.

(ii) தமிழக அரசின் பொது நிதியை பொறுப்புடனும், திறமையுடனும் மேலாண்மை செய்தல்.

(iii) ஒவ்வொரு ஆண்டும் அரசின் வரவினங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான மதிப்பீடுகளை தயாரித்து சட்டமன்றத்தில் தாக்கல் செய்தல்.

(iv) மாநில அரசின் நிதி மேலாண்மை தொடர்பான அனைத்து கொள்கை முடிவுகளையும் அரசு எடுக்க உதவுதல் மற்றும் மறுஆய்வு செய்தல்.

(v) மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, அரசின் நிதி இலக்குகளை எய்தும் பொருட்டும், மக்களின் நலனை கருத்தில் கொண்டும் வரவுகளுக்கு ஏற்றவாறு, செலவுகளை கட்டுப்படுத்துதல், துறைவாரியான நிதித்தேவை, செலவுக்கேற்ற பயன், ஆகியவற்றின் அடிப்படையில் வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கம், நிதி நடைமுறைகளுக்குட்பட்டு பல்வேறு கருத்துருக்களை கூர்ந்தாய்வு செய்து மதிப்பீடு செய்தல்.

(vi) நிதி நிலையைச் சீராகப் பராமரிக்கும் பொறுப்புடன், கடன் பொறுப்புகளையும் அளவுகோல்படி கட்டுப்படுத்தி, பெறப்பட்ட கடனை திருப்பிச் செலுத்தும் பொறுப்பு.

4. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம் ஆகிய அமைப்புகளுடன் பின்வரும் ஏழு துறைகளும் நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன:-

| | |
|---|---|
| (i) | கருவூலக் கணக்குத் துறை |
| (ii) | உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை |
| (iii) | கூட்டுறவு தணிக்கைத் துறை |
| (iv) | சிறுசேமிப்புத் துறை |
| (v) | அரசு தகவல் தொகுப்பு விவர மையம் |
| (vi) | அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை |
| (vii) | ஓய்வூதிய இயக்ககம் |

தொடர் எண் (i) முதல் (vi) வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் இக்கொள்கை விளக்கக் குறிப்பில் இடம்பெற்றுள்ளன. ஓய்வூதிய இயக்ககத்தின் செயல்பாடுகள்

பற்றிய விளக்கம், கோரிக்கை எண்.50 “ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகாலப் பயன்களும்” குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம்

5. உயர் வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாட்டைக் கொண்டு செல்வதற்கும் மாநிலத்தின் அனைத்து மக்களும் வளர்ச்சியின் பயனைத் துய்ப்பதற்கும், உள்கட்டமைப்புகளில் உத்தி சார்ந்த முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 2012 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22-ஆம் நாளன்று தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 -ஐ தொடங்கி வைத்தார். மாநில மக்களின் முறையான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி, உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினை அவர்கள் பெறுவதற்கான, உயரிய குறிக்கோளுடனும், உள்ளார்ந்த கொள்கையுடனும் இத்தொலைநோக்குத் திட்டம், தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் உயர் பொருளாதார ஆற்றல், மிகச் சிறந்த, தரமான மனிதவளக் குறியீடுகள், அனைவருக்கும் அடிப்படை சேவைகள் கிடைக்கக்கூடிய வகையிலான உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு

மேம்பாடு, முதலீட்டுச் சூழல் ஒப்பீட்டளவில், ஆசியாவிலேயே சிறந்து விளங்குகிற அளவிலும் இந்தியாவில் அறிவாற்றல் மற்றும் புத்தாக்க மையமாக தமிழ்நாடு முன்னிலை வகிக்கக்கூடிய நிலையில் கணிக்கப்படுதல் போன்ற முக்கிய அம்சங்களை தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 உள்ளடக்கியுள்ளது.

6. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணம் 15,00,000 கோடி ரூபாய் அளவிலான அரசு, தனியார், அரசு-தனியார் கூட்டுப் பொறுப்பில் முதலீடுகள் பெற்று உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு வகைசெய்கிறது. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023, பகுதி-2 ஆவணத்தில் 217 திட்டங்கள் செயல்படுத்துவதற்காக அடையாளம் கண்டறியப்பட்டுள்ளன. இந்த 217 தொலைநோக்குத் திட்டங்களில், இரயில்வே, துறைமுகங்கள் மற்றும் வானூர்தித் துறைகளில் 2,33,523 கோடி ரூபாய் மதிப்பில் 27 திட்டங்கள் மத்திய அரசால் செயல்படுத்தப்பட வேண்டும். எஞ்சியுள்ள 190 திட்டங்கள் மாநில அரசு, அதன் முகவரமைப்புகளின் மூலமாகவும், தனியார் துறை பங்களிப்புடனும்

செயல்படுத்தப்படவுள்ளன. இந்த 190 திட்டங்களில், 90 திட்டங்கள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள திட்டங்கள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

7. தமிழ்நாடு 2012 ஆம் ஆண்டு உள்கட்டமைப்பு வளர்ச்சி சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB), மாநிலத்தின் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கான ஒருங்கிணைப்பு முகமையாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 இல் குறிப்பிட்டுள்ளவாறு உள்கட்டமைப்பு வளர்ச்சியை திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல், முறைப்படுத்துதல் மற்றும் செயல்படுத்த உதவுதல் போன்ற பணிகளை மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையின்கீழ் இவ்வாரியம் மேற்கொள்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாரியம், மாநிலத்தில் உள்கட்டமைப்பு வளர்ச்சி நடவடிக்கைகளை, பெருமளவில் ஒருங்கிணைப்பதுடன் அரசு நிறுவனங்கள், பொதுத்துறை வாயிலாகவும் பொது-தனியார் பங்களிப்பு முறையின் வாயிலாகவும் திட்டங்களை மேற்கொள்வதற்கு வகை

செய்கிறது. புதிய திட்டங்களை தயாரிப்பது மற்றும் திட்டங்களை செயற்படுத்துவது ஆகியவற்றிற்கு உதவும் நோக்குடன், 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்கட்டமைப்பு வளர்ச்சி சட்டத்தின் கீழ், திட்டத் தயாரிப்பு நிதி (PPF) மற்றும் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (TNIDF) ஆகிய இரண்டு நிதியங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

8. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், சாலை இணைப்பு வசதிக்காக தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II இன் கீழ் நான்கு வழி மாநில நெடுஞ்சாலை; சென்னை மெட்ரோ இரயில் விரிவாக்கம்; மாநகர விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டத்தை சென்னை பெருநகரப் பகுதியில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் திட்டத்துடன் ஒருங்கிணைத்தல்; பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் அளவிற்கு கடல் நீரை குடிநீராக்கும் திட்டம்; ஜவுளித் தொழில் பூங்காக்களில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகளை நிறுவுதல்; சென்னை மாநகரில் விரைவுப்பேருந்து போக்குவரத்து ஏற்பாடு; மின்சக்தியை சேமிக்கும் பொருட்டு 101 பேரூராட்சிகளில் மின் சேமிப்பு தெருவிளக்குகளை

அமைத்தல்; தொழிலகத் தேவைகளுக்கென்றே சென்னைக்கும் பெங்களூருக்கும் இடையில் நீர் வழங்கல் கட்டமைப்பை உருவாக்குதல் போன்ற முக்கியமான உள்கட்டமைப்பு திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகளை தயாரிப்பதற்காக, திட்ட தயாரிப்பு நிதியிலிருந்து சுமார் 125 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்துள்ளது. இதன் மூலம் மாநில அரசு இந்த திட்டங்களுக்கு இருதரப்பு மற்றும் பன்னாட்டு முகமைகளிடம் நிதியுதவி பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

9. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகவரமைப்பின் நிதியுதவியுடன் சென்னை பெருநகரப் பகுதியில் உயர்தொழில்நுட்பத்துடன் கூடிய போக்குவரத்து முறையை நிறுவும் திட்டத்தினைச் (Intelligent Transport System Installation Project) செயல்படுத்துவதற்காக, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் உதவி வருகிறது. ஆசிய வளர்ச்சி வங்கி பங்கேற்புடன், மத்திய அரசின் தொழில் கொள்கை மற்றும் தொழில் வளர்ச்சித் துறை (DIPP) செயல்படுத்தக் கருதியுள்ள கிழக்கு கடலோரப் பகுதி பொருளாதாரப்

பெருவழியின் இரண்டாம் நிலையான சென்னை-கன்னியாகுமரி தொழிலகப் பெருவழி மேம்பாட்டுத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பது தொடர்பாகவும் பல்வேறு நடவடிக்கைகளை இவ்வாரியம் ஒருங்கிணைத்து செயல்படுத்திவருகிறது.

## தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம்

10. கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்த கூடுதல் நிதி திரட்டும் முயற்சியாக, நாட்டிலேயே முதன் முறையாக, ஒரு சொத்து மேலாண்மை நிறுவனமாக, தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகத்தை (TNIFMC) மாநில அரசு நிறுவியுள்ளது. தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகத்தால் நிருவகிக்கப்படும் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியத்திற்கு முதலில் ஈடுசெய்யப்படும் ஊக்க மூலதன நிதியாக 300 கோடி ரூபாய் வழங்க தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் உறுதி செய்துள்ளது. இதில், 30 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 270 கோடி ரூபாய்

தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம் கோரும் நேர்வில் விடுவிக்கப்படும்.

11. இது தவிர தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியத்திற்கு முதலீடு பெறுவது தொடர்பாக இக்கழகம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ள பயன்களின் விவரம் பின்வருமாறு:-

1. தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியத்தில் இந்தியன் வங்கி 25 கோடி ரூபாய் முதலீடுகள் செய்ய இசைவினை தெரிவித்துள்ளது.

2. இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (எல்.ஐ.சி) 150 கோடி ரூபாய் அல்லது தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியத்தின் அளவீட்டில் 20 சதவீதம் முதலீடு செய்ய சம்மதித்துள்ளது.

3. பீனிக்ஸ் எஸ்.ஏ. (லக்ஸம்பர்க்), ட்ரீடாப் அஸட் வென்சர்ஸ் எஸ்ஏ யின் ஆலோசகர் (லக்ஸம்பர்க்) தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியத்திற்கு மொத்தமாக 600 மில்லியன் அமெரிக்க டாலர்கள், அதாவது 3,500 கோடி ரூபாயிலிருந்து 4,000 கோடி ரூபாய் வரை முதலீடு செய்வதற்கு இசைவினை தெரிவித்துள்ளது.

மேலும் முதற்கட்டமாக 25 மில்லியன் அமெரிக்க டாலர்கள், அதாவது 160 கோடி ரூபாய் தொடக்கப் பங்களிப்பாக திட்டங்களின் முயற்சியைப் பொறுத்து வழங்கவுள்ளது. இவை தவிர பொது காப்பீட்டுக் கழகம் [ஜெனரல் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா], கிராமப்புற மின்மயமாக்கும் நிறுவனம் (ரூரல் எலெக்டிரிபிகேஷன் கார்ப்பரேஷன்) மற்றும் பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் போன்ற நிறுவனங்களிடமிருந்தும் முதலீடுகளை பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

12. 2017-2018-ம் நிதியாண்டில், தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் (**TANGEDCO**) நீர்மின் திட்டங்களை புதுப்பித்தல், நவீனமயமாக்குதல் திட்டங்களுக்காக 500 கோடி ரூபாய் வரை முதலீடு செய்வதற்கு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தூத்துக்குடியில் உள்ள தொழிற்சாலைகளுக்கு மறுசுழற்சி முறையில் நீர் விநியோகம் செய்வதற்கு 800 கோடி ரூபாய் அளவில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது, காற்றாலை எரிசக்தி இயந்திர நிலையம் மற்றும் சூரிய ஒளி பூங்கா நிறுவுதல். தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023

ஆவணத்தில் எதிர்நோக்கியபடி சென்னைக்கு அருகில் மருத்துவ நகரம் அமைத்தல், தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழக உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளை புனரமைப்பு செய்வது போன்ற முதலீட்டு முயற்சிகளிலும் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

13. தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகமானது, தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியம் மட்டுமல்லாது தேசிய வீட்டு வசதி வங்கியுடன் இணைந்து "தமிழ்நாடு உறைவிட நிதியம் (அடுக்கு-2) பதிவு செய்வதற்காக இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் ஒப்புதலைப் பெறுவதற்கு மேற்கொண்டுள்ள முயற்சி இறுதிக் கட்ட நிலையில் உள்ளது. இத்தகைய முயற்சிகள், அரசுக்கு இயல்பாக கிடைக்கும் நிதி ஆதாரத்துடன், கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டி உள்கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்த உதவும்.

# கருவூலக் கணக்குத் துறை

14. கருவூலக் கணக்குத் துறை, கருவூலக் கணக்கு ஆணையரை துறைத் தலைவராகக் கொண்டு நிதித்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இத்துறையின்கீழ் இயங்கும் 6 மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், 6 சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 3 சார் சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 32 மாவட்டக் கருவூலங்கள், ஒரு ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், ஒரு உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் 243 சார் கருவூலங்கள், கருவூலம் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

## பட்டியல்கள் தானியங்கி முறையில் ஏற்பளிக்கும் முறை (Automated Treasury Bill Passing System)

15. கருவூலச் செயல்பாடுகளான மாதாந்திரக் கணக்குகள் தயாரித்தல், பட்டியல்கள் நிலையை கண்டறிதல் மற்றும் பட்டியல்கள் ஏற்பளிப்பு போன்றவற்றில் உள்ள நடைமுறை சிக்கல்களைக் களையும் பொருட்டு இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பட்டியல்கள் தானியங்கி

முறையில் ஏற்பளிக்கும் திட்டம், அனைத்து சம்பளக் கணக்கு அலுவலகங்கள், மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சார் கருவூலங்களில் நடைமுறையில் உள்ளது. இந்த முறை, பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள், வங்கிகள் மற்றும் மாநிலக் கணக்காயர் போன்ற பல்வேறு பயன்பாட்டாளர்களுக்கு சிறப்பான வசதிகள் அளிப்பதுடன், சிறந்த முறையில் கண்காணிக்கவும் உதவுகிறது. இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காகவும் பணியாளர்களின் வேலைத் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் கணினி மற்றும் இதர உபகரணங்கள் வழங்குதல், குறும்பரப்பு வலையமைப்பு / தமிழ்நாடு அகன்ற வலையமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தருதல், அலுவலகங்களை நவீனப்படுத்துதல் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## வலைதள சம்பளப் பட்டியல் மென்பொருள் (Web Payroll)

16. வலைதள சம்பளப் பட்டியல் மென்பொருள் பயன்பாடு தமிழ்நாடு அரசின் அனைத்து துறைகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 29,000 பணம் பெற்று

வழங்கும் அலுவலர்கள், வலைதள சம்பளப் பட்டியல் மென்பொருள் மூலம் பணியாளர்களது சம்பளப் பட்டியல்கள் தயார் செய்கின்றனர். அரசு ஊழியர்கள் தொடர்பான மேலாண்மைத் தகவல் தொகுப்பு அறிக்கைகள் (**MIS**), ஒருமித்த தரவுதளத்தின் (Centralized Database) மூலம் பணியாளர்களின் சம்பளம் மற்றும் அதைச் சார்ந்த பிற விவரங்களையும் பணியாளர்கள் பணியில் சேர்ந்த நாள், ஓய்வு பெற்றவர்கள் விவரம், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஓய்வு பெறும் பணியாளர்களின் விவரங்கள், அவர்களுடைய தர ஊதியத்தின்படியும், பதவியின்படியும் பெறும் வகையில் வலைதள சம்பளப் பட்டியல் மென்பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் மனிதவள மேலாண்மைக்கு இத்திட்டம் ஒரு பயனுள்ள கருவியாக அமைந்துள்ளது.

## ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் (Integrated Financial and Human Resources Management System)

17. நிதி மற்றும் மனிதவள மேலாண்மையை ஒருமைப்படுத்தி ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள

மேலாண்மைத் திட்டத்தினை 288.91 கோடி ரூபாய் செலவில் ஐந்து ஆண்டு காலத்திற்கு அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வரவுசெலவுத் திட்ட விவரங்கள், நிதி ஒதுக்கீடு மற்றும் செலவினம் உள்ளிட்ட நிதி மேலாண்மை, மனிதவள மேலாண்மை ஆகிய அனைத்தையும் நிகழ்நேர அடிப்படையில் கண்காணிக்கும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் ஒருங்கிணைப்பாளராக விப்ரோ நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள 29,000க்கும் மேற்பட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் நேரடி இணையத்தின் மூலம் பட்டியலைக் கருவூலத்தில் சமர்ப்பிக்க இயலும். இத்திட்டத்தில் வருவாய் வசூல் கணக்குகளை நிகழ் நேரத்தில் (Real Time) மின்னணு வருவாயாகப் பெறுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் பொது மக்கள் இடையூறின்றி உடனடியாக சேவைகளைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஒன்பது இலட்சம் அரசுப் பணியாளர்களின் பணிப்பதிவேடுகள் எளிமையான முறையில் பராமரிக்க வழிவகை

செய்யப்பட்டுள்ளதோடு, சம்பளப் பட்டியல், பதவி உயர்வு, மாறுதல்கள், விடுப்பு மேலாண்மை போன்ற விவரங்கள் நிகழ்நேர அடிப்படையில் உடனுக்குடன் பதியப்படும். இத்திட்ட மென்பொருள் தயாரிக்கப்பட்டு சோதனை அடிப்படையில் ஆய்வில் உள்ளதால் 2018-19 ஆம் நிதியாண்டிற்குள் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

**ஓய்வூதியதாரர்களுக்கு மின்னணு உயிர்வாழ் சான்றிதழ், ஜீவன் பிரமான் தரவுதளம் (JEEVAN PRAMAAN PORTAL) மூலம் பெறுதல்**

18. வருடந்தோறும் சுமார் 6.50 இலட்சம் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் வருடாந்திர நேர்காணலுக்கு கருவூலத்திற்கு வருகின்றனர். இவ்வருடாந்திர நேர்காணல் ஏப்ரல், மே, ஜூன் மாதத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். நீண்ட தொலைவிலிருந்து கருவூலத்திற்கு வருகைபுரியும் வயதான ஓய்வூதியதாரர்களின் இன்னல்களைத் தவிர்க்கும் பொருட்டு, ஓய்வூதியதாரர்கள் தங்களது மின்னணு உயிர்வாழ் சான்றிதழை ஜீவன் பிரமான் (Jeevan Pramaan) என்ற

தரவுதளத்தின் மூலம் ஆதார் எண்ணைப் பயன்படுத்தி தங்களது இருப்பிடத்திற்கு அருகில் உள்ள இ-சேவை மையங்களை அணுகி நேர்காணலை நிறைவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## புதிய கருவூலங்கள் ஏற்படுத்துதல் / கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

19. அனைத்து மாவட்டக் கருவூல அலுவலகங்களும் தற்போது அரசு கட்டடத்தில் இயங்கி வருகின்றன. 2011 முதல் 2017 வரையிலான கடந்த ஆறு ஆண்டுகளில் 37 புதிய சார் கருவூலங்கள் ஏற்படுத்தப்பட்டு, தற்போது மொத்தம் 243 சார் கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. அரசு, 78 சார் கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக ஒப்பளிப்பு செய்து, அவற்றில் 55 சார் கருவூலங்களின் கட்டடப் பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளன. பிற இடங்களில் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் - 2016

20. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2012, அரசால் 30.06.2016 க்கு பிறகு மேலும் நான்காண்டுகளுக்கு சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்-2016, பொதுத்துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீட்டுக் கழகத்தின் மூலம் 01.07.2016 முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்கள், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் தமிழ்நாடு சட்டப் பேரவையில் இயற்றப்பட்ட சட்டங்களின் கீழ் ஏற்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தகுதியுடைய அவர்தம் குடும்ப உறுப்பினர்களின் மருத்துவ நலன்களுக்காக நான்காண்டுகளில் நான்கு இலட்சம் ரூபாய் வரை மருத்துவ உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

21. இப்புதிய திட்டத்தில், கீழ்க்காணும் உயர் சிகிச்சைகளுக்கு 7.50 இலட்சம் ரூபாய் வரை மருத்துவ சிகிச்சை பெற உச்சவரம்பு உயர்த்தப்பட்டுள்ளது.

i) புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை மற்றும் புற்றுநோய் கட்டிகளுக்கான நோய் தடுப்பாற்றல் சிகிச்சை முறைகள்.

ii) கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை.

iii) சிக்கலான இதய அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை.

iv) விபத்து மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் பல்வகைப்பட்ட எலும்பு முறிவு.

v) இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை, அன்யூரிசிம்ஸ் மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி.

vi) தீயினால் ஏற்பட்ட காயங்களுக்கான சிகிச்சை.

22. இத்திட்டத்தில் கண்புரை அறுவை சிகிச்சைக்கான மருத்துவ உதவியின் உச்சவரம்பு, ஒரு கண்ணிற்கு 25,000 ரூபாயாகவும், கர்ப்பப்பை நீக்குவதற்கான அறுவை சிகிச்சை உதவியின் உச்ச வரம்பு 45,000 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விபத்தினால் ஏற்படும்

அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்படாத (Non-Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 113 வகையான சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகள் மேற்கொள்வதற்கு, தமிழ்நாடு, புதுச்சேரி, திருவனந்தபுரம், பெங்களூரு மற்றும் புதுதில்லி ஆகிய இடங்களில் உள்ள 807 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில், கட்டணமில்லா மருத்துவ சிகிச்சைகள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 01.07.2012 முதல் 30.06.2016 வரையிலான நான்காண்டுகளில் 1,85,920 பயனாளிகள் 738.06 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர். புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2016-இன் கீழ் இதுவரை 83,487 பயனாளிகள் 327.81 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

## பொது நிதி மேலாண்மைத் திட்டம் (PFMS)

23. பொது நிதி மேலாண்மைத் திட்டம், இந்திய அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் நிதி விடுவித்தல், கணக்குகளை ஒத்திசைவு செய்து அறிக்கை சமர்ப்பித்தல் முதலானவற்றிற்குத் தீர்வு காணும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. திட்ட மேலாளர்களுக்கு மத்திய நிதியிலிருந்து நிதி விடுப்புகளைக் கண்டறியவும், பயன்பாட்டைக் கண்காணிக்கவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்திய அரசு மற்றும் மாநில அரசின் ஆணைகள் மற்றும் வழிகாட்டுதலின் அடிப்படையில், பொது நிதி மேலாண்மைத் திட்டத்தினை செயலாக்க, சீரிய முறையில் கருவூலம் மற்றும் கணக்குத் துறை பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

## பணியாளர்களுக்குப் பயிற்சி

24. மாண்புமிகு நிதி, மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் 19.07.2017 அன்று

சட்டப் பேரவையில், மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது, கருவூலக் கணக்குத் துறையிலுள்ள பணியாளர்களுக்கு கருவூலப் பணிகள், நிதி நிலை அறிக்கை தயாரித்தல், அரசின் வரவு செலவுகள் மற்றும் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் குறித்து பயிற்சி வழங்கப்படும் என்று அறிவித்தார். அதன்படி அரசால், அரசாணை எண்.322 நிதி (க.க.III)த் துறை, நாள்.30.10.2017 மூலம் 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கருவூலம் மற்றும் கணக்குத் துறையிலுள்ள உதவி கணக்கு அலுவலர், கணக்கு அலுவலர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர் நிலையிலுள்ள 543 அலுவலர்களுக்கு அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிலையம், சென்னை மூலம் 19.02.2018 முதல் பயிற்சி தொடங்கி நடைபெற்று வருகிறது.

# உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

25. மாநிலத்திலுள்ள நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், வேளாண்மை விற்பனை குழுக்கள், உள்ளூர் நூலக ஆணைக்குழுக்கள் மற்றும் இதர நிறுவனங்களின் கணக்குகளை அவற்றுக்குரிய சட்ட விதிகளின் கீழ் தணிக்கை செய்யும் பணி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையைச் சார்ந்ததாகும். இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம்' 2014 - சட்டம் (த.நா. சட்ட எண்:24) நிறைவேற்றப்பட்டு 14.12.2014 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள் 24.08.2016 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

26. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014 இன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் தணிக்கையைத் தவிர பிரிவு 5- இன் படி அரசின் முன் அனுமதியுடன் இதர நிறுவனங்களின் தணிக்கையும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

இயக்குநரால் சட்டப்பூர்வமாக மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாடு உள்ளாட்சி நிதிச் சட்டம் 2014 பிரிவு 20- இன் படி உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் தன்னால் தணிக்கை செய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் மீதான தொகுப்பு அறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அரசு அதனை சட்டமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

27. தமிழ்நாடு சட்ட மன்றத்தில் தணிக்கை அறிக்கையினை சமர்ப்பிப்பது குறித்து மாநிலக் கணக்காயரால் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தணிக்கை அறிக்கை வடிவத்தை அவ்வப்போது மாற்றி அமைக்கவும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள் 2016 வகை செய்கிறது.

28. தற்போது பின்வரும் நிறுவனங்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

| வ. எண் | நிறுவனங்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 12 |
| 2 | நகராட்சிகள் | 124 |
| 3 | பேரூராட்சிகள் | 528 |
| 4 | மாவட்ட ஊராட்சிகள் | 31 |
| 5 | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| 6 | பல்கலைக் கழகங்கள் | 23 |
| 7 | நூலக ஆணைக்குழுக்கள் | 32 |
| 8 | வேளாண்மை விற்பனைக் குழுக்கள் | 22 |
| 9 | தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம் | 1 |
| 10 | வேளாண் விற்பனைக் கழக பொறியியல் பிரிவு | 3 |
| 11 | கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி | 1 |
| 12 | உள்ளூர் திட்டக் குழுமங்கள் | 27 |
| 13 | கிராம ஊராட்சிகள் (ஆண்டுதோறும் சுழற்சி முறையில் 22%) மொத்த கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை - 12524 | 2801 |
| 14 | பல்வகை நிறுவனங்கள் | 11 |
| 15 | தேசிய சமூக நலத் திட்டம் | 32 |
| | **மொத்தம்** | **4033** |

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் நோக்கம்

29. உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளைச் சரிபார்த்தல், வரவு செலவுகள் முறையாக உள்ளனவா எனச் சரிபார்த்தல், மேற்படி வரவு செலவுகள் சம்பந்தப்பட்ட சட்டத்திற்குட்பட்டும் விதிகளின் படியும் அரசாணைகளின் படியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதனை உறுதி செய்தல், உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் அவ்வமைப்புகளின் செயல்பாட்டின் உண்மை நிலையை பிரதிபலிக்கின்றனவா எனவும் சரிபார்த்தல் ஆகிய நோக்கங்களோடு உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரி செலுத்துவோரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதனை உறுதி செய்வதோடன்றி உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு மற்றும் பிற நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் நிதி முழுவதும் வழங்கப்பட்ட காரணங்களுக்காக பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் அவை சமுதாய நலனுக்கு பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் தணிக்கையில் உறுதி செய்யப்படுகிறது.

## கிராம ஊராட்சி அமைப்புகளின் சோதனை தணிக்கை

30. கிராம ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில் மொத்த ஊராட்சிகளின் எண்ணிக்கையில் 22 சதவீதம் சோதனை தணிக்கையாக உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மொத்தம் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளில், ஆண்டுதோறும் 2,801 கிராம ஊராட்சிகளில் சோதனை தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

## நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் உடன்நிகழ் தணிக்கை (Concurrent Audit)

31. தற்போது 12 மாநகராட்சிகளிலும், 17 நகராட்சிகளிலும் மற்றும் 14 பல்கலைக் கழகங்களிலும் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2000-2001-ஆம் ஆண்டு முதல், 385 ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் காலாண்டு தணிக்கை முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி 116 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு

மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு ஆய்வாளர் மற்றும் ஒரு துணை ஆய்வாளர் அல்லது ஒரு உதவி ஆய்வாளர் அடங்கிய ஒரு குழு வீதம் தணிக்கைக் குழுக்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ளன.

## 32. மாநகராட்சிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகராட்சிகளில் உடன்பின் தணிக்கை (Immediate Post Audit) முறை அமல்படுத்தப்படுதல்

அ) உடன்நிகழ் தணிக்கை செயல்படுத்தப்படுகின்ற கீழ்க்கண்ட 12 மாநகராட்சிகளிலும், 17 நகராட்சிகளிலும் உடன்பின் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றது. இம்முறையின்படி செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு, தொகை வழங்கப்பட்டவுடன் செலவுச் சீட்டுகள் தணிக்கைக்கு உடனடியாக வழங்கப்பட்டு, அச்செலவு சீட்டுகளின் தணிக்கை உடனுக்குடன் செய்யப்பட்டு, குறைபாடுகள் நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்படுகின்றது. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை உடனுக்குடன் நிர்வாகத்தால் களைய இச்செயல்முறை வழிகோலுகிறது.

| வ. எண். | மாநகராட்சிகள் (உடன்நிகழ் தணிக்கை) | நகராட்சிகள் (உடன்நிகழ் தணிக்கை) |
|---|---|---|
| 1. | சென்னை | ஆவடி |
| 2. | சேலம் | காஞ்சிபுரம் |
| 3. | கோயம்புத்தூர் | கடலூர் |
| 4. | திருச்சி | கரூர் |
| 5. | மதுரை | கும்பகோணம் |
| 6. | திருநெல்வேலி | புதுக்கோட்டை |
| 7. | தூத்துக்குடி | பழனி |
| 8. | வேலூர் | பொள்ளாச்சி |
| 9. | திருப்பூர் | ஊட்டி |
| 10. | ஈரோடு | நாகர்கோவில் |
| 11. | தஞ்சாவூர் | மறைமலைநகர் |
| 12. | திண்டுக்கல் | தாம்பரம் |
| 13 | | பல்லாவரம் |
| 14 | | திருவண்ணாமலை |
| 15 | | கொடைக்கானல் |
| 16 | | இராஜபாளையம் |
| 17 | | கோவில்பட்டி |

ஆ) உடன்நிகழ் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புரைகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அவற்றிற்கு பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு குறைகள் சரி செய்யப்பட்டதை உறுதி செய்யுமிடத்து, அந்த தணிக்கை மறுப்புரைகள் நீக்கப்பட்டு, நிலுவையில் உள்ள மறுப்புரைகளும் வரவு மற்றும் செலவுகள் தொடர்பான பத்திகளும் இறுதி செய்யப்பட்டு, அவற்றை உள்ளடக்கியதாக தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன.

## உடன்நிகழ் தணிக்கைக்கு உட்படாத பிற அமைப்புகளின் தணிக்கை

33. உடன்நிகழ் தணிக்கைக்கு உட்படாத எஞ்சியுள்ள 107 நகராட்சிகள், 9 பல்கலைக் கழகங்கள், இதர உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் பிற பல்வகை நிறுவனங்களின் தணிக்கை, ஆண்டுதோறும் மேற்படி

நிறுவனங்களிலிருந்து ஆண்டுக் கணக்குகள் பெறப்பட்ட பின்னர், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 34. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் இயல்புநிலைக் கணக்கு அடிப்படையிலான (Accrual based) கணக்கு வைப்பு முறையை செயற்படுத்துதல்

i) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறைக்குப் பதிலாக மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் இயல்புநிலைக் கணக்கு அடிப்படையிலான கணக்கு வைப்பு முறை (Accrual based Accounting System) 1999-2000, 2000-2001 ஆகிய கணக்கு ஆண்டுகளிலிருந்து இரு கட்டங்களாக செயல்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து பேரூராட்சிகளிலும் 2002-2003 ஆம் ஆண்டு முதல் இந்த கணக்கு முறை செயல்படுத்தப்பட்டுள்ளது. 2016-2017 முதல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 7 இலக்க குறியீடுகளைக் கொண்ட தேசிய அளவிலான நகராட்சிகளின் கணக்கு நடைமுறை சார்ந்த கணக்கீடு முறை அமல்படுத்தப்பட்டு வருகிறது.

ii) ஓர் ஆண்டின் நிதி சார் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவுக் கணக்குகளையும் (Income and Expenditure Account) ஒரு குறிப்பிட்ட கால அளவில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் உண்மையான நிலையை அறிந்துகொள்ள உதவும் ஐந்தொகைக் கணக்குகளையும் (Balance Sheet) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு வைப்பு முறை கோட்பாட்டின்படி தயாரித்து, கணக்குகள் பேணுவதே இந்த கணக்கு முறையின் இலக்கு மற்றும் நோக்கமாகும்.

iii) இந்த நடைமுறையினால் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள், அவற்றின் சொத்துக்களை உரிய மதிப்பீட்டு முறைகளோடும், சொத்து பதிவேட்டின் மூலமும் கணக்குகளில் சேர்த்து அறிந்துகொள்ள முடியும். வெளிப்படைத் தன்மையுள்ள இந்த புதிய கணக்கு முறைகளைச் செயல்படுத்தியிருப்பதால், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மூலதனத் திட்டங்களுக்கும், நலத்திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்க பல நிதி நிறுவனங்கள் முன்வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

## 35. உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டு கணக்குகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் ஆண்டு கணக்குகளுக்கு தணிக்கைச் சான்று வழங்குதல்:

i) உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டு கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று வழங்குவது அத்தியாவசியமான பணியாகும். மேலும் தணிக்கைச் சான்று அளிக்கப்படாத கணக்குகள் அங்கீகாரமற்றது என்பது சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாகும். எனவே, அரசாணை பல்வகை எண்.93 நிதி (நி.கு.IV) துறை நாள்.28.3.2003- இல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்பட்டுவரும் இயல்புநிலைக் கணக்கு அடிப்படையிலான கணக்குகள், முறைப்படி தயார் செய்யப்பட்டு ஆண்டுக் கணக்குகள் இத்துறையால் தணிக்கை செய்யப்பட்டு சான்றளிக்கப்படுகின்றன.

ii) பல்கலைக் கழக மானியக் குழு, மாநில / மத்திய அரசு மற்றும் இதர நிதி அளிக்கும் நிறுவனங்களால் இத்துறையின் தணிக்கை வரம்பிற்கு உட்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் பயன்படுத்தப்பட்டதற்கு,

இத்துறையினால் தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

## 36. **தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யும் நடைமுறை**

i) தணிக்கை அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின் போது கண்டறியப்படும் பெரும் முறைகேடுகள் உடனடியாக சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக அலுவலர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பெரும் முறைகேடுகள் மற்றும் தொகை இழப்புகள் பற்றிய விவரங்கள் மாதாந்திர காலமுறை அறிக்கை மூலம் அரசுக்கும், சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகளின் தலைவர்களுக்கும் தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தெரியப்படுத்தப்படுகின்றன.

ii) தணிக்கை மறுப்புரைகளுக்கு பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு திருப்தியான விளக்கங்கள் அளிக்கும்

நிலையில் தணிக்கைத் தடைகள் நீக்கப்படுகின்றன. மேலும், தணிக்கைத் தடைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிர்வாகத் துறை ஏற்பாடு செய்யும் கூட்டமர்வின் மூலமாகவும், இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களால் தணிக்கைத் தடைகளுக்கு உடனடி தீர்வு காணப்படுகிறது.

iii) தணிக்கையின் போது தொடக்க நிலை மற்றும் இறுதி நிலை விவாதமுறை பின்பற்றப்படுவதால், தணிக்கையில் அவ்வப்போது சுட்டிக்காட்டப்படும் தவறுகளைச் சரி செய்ய இது வாய்ப்பாக அமைகிறது.

## 37. மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு மற்றும் மாநில அளவிலான உயர் நிலைக் குழு அமைத்தல்

i) ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராக கொண்டு மாவட்ட உயர்நிலைக் குழுக்களும், ஊரக வளர்ச்சி ஆணையரைத் தலைவராகக் கொண்டு மாநில உயர்நிலைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. 2017-2018 -ஆம் ஆண்டில் மாவட்ட

அளவிலான 108 உயர்நிலை குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 2,619 தணிக்கைத் தடைகள் மீது முடிவெடுக்கப்பட்டன.

ii) பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநரை தலைவராக கொண்டும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டும் பேரூராட்சிகளுக்கான உயர்நிலைக் குழுக்கள் அ.ஆணை எண்.1 ந.நி.ம.கு.வ.துறை (பேரூ2) நாள் 04.01.07-ல் அமைத்து ஆணையிடப்பட்டுள்ளன. 2017-2018-ஆம் ஆண்டில் பேரூராட்சிகளுக்கு மாவட்ட அளவிலான 5 உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 313 தணிக்கைத் தடைகள் மீது முடிவெடுக்கப்பட்டன.

iii) அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளுக்கான மாவட்ட உயர் நிலைக் குழு, மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டும், மாநில அளவிலான உயர்நிலைக் குழு, நகராட்சி நிர்வாக இயக்குநரை தலைவராகக் கொண்டும் அரசு ஆணை எண்.65, ந.நி. (ம) கு.வ. துறை நாள்

22.5.2007- இன் படி அமைக்கப்பட்டுள்ளது. 2017-2018 -ஆம் ஆண்டில் நகராட்சிகளுக்கு 28 உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் மாவட்ட அளவில் நடத்தப்பட்டு 5,815 தணிக்கை மறுப்புரைகள் மீது முடிவெடுக்கப்பட்டன.

## சிறப்புப் பணிகள்

38. வழக்கமான தணிக்கைப் பணிகளுடன் கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**அ) <u>உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல்</u>:**

நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதியப் பயன்களுக்குச் சான்று / ஒப்பளிப்பு மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 31.03.2018 அன்றைய நிலவரப்படி மொத்தம் 30,631 ஓய்வூதியதாரர்கள், நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர். ஓய்வூதியத்திற்கான தொகை சம்பந்தப்பட்ட துறைத்

தலைவர்களால், மாநில நிதி ஆணைய பகிர்வு நிதி தொகையிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**ஆ) <u>உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்கள் குறைகள் தீர்த்தல்</u>**

உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்கள், தங்கள் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதிய முன்மொழிவுகள் தொடர்பான குறைகளைக் களைவதற்கும், தேவைப்படும் விவரங்களைக் காலதாமதமின்றி உடன் பெற்றுக் கொள்வதற்காகவும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**இ) <u>நகராட்சி ஓய்வூதியதாரர்கள் நல மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் நிர்வகித்தல்</u>**

ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை (பல்வகை) எண்.120, ந.நி.கு.வ.துறை, நாள்.25.5.1999- இன் படி, நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு 01.08.1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு

வருகின்றன. **2017-2018** ஆம் ஆண்டில் ஓய்வூதியதாரர்கள் நலத்திட்டத்தின் கீழ் 293 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 114.09 இலட்சம் ரூபாயும், குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தில் 109 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 116.45 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**ஈ) ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்கள் நல மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் நிர்வகித்தல்**

ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை **(பல்வகை) எண்.23,** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை **(இ7) நாள்.15.03.2013** இன் படி, ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களுக்கும் **01.04.2013** முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் கீழ் **2017-2018** -ஆம் ஆண்டில் ஓய்வூதியதாரர்கள் நலத்திட்டத்தில் 129 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 34.15 இலட்சம் ரூபாயும், குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தில்

128 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 32.78 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**உ) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்**

உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும் அவற்றின் முதலீடுகளும் அரசால் 1967- ஆம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளின் இருப்புகளுக்கு வட்டி வழங்குவதற்கு, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2017-2018 ஆம் ஆண்டில் 18 கோடி ரூபாய் அளவிற்கு அரசால் ஒப்புளிப்பு செய்யப்பட்டு, அத்தொகை முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக அளிக்கப்பட்டுள்ளது.

**ஊ) அறக்கட்டளைகளின் பொருளாளர்**

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் 01.04.1952 முதல் இத்துறையால் பராமரிக்கப்படும் அறக்கட்டளைகளின்

பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அறக்கட்டளைகளை அரசு ஏற்று ஒப்பளித்து அறக்கட்டளைகளின் நிர்வாகத் திட்டங்களை அரசிதழில் வெளியிடுகிறது. இந்த அறக்கட்டளை நிதிக்கான வட்டித் தொகை, தொடர்புடைய நிறுவனங்களுக்கு அவர்களிடமிருந்து வரும் கோரிக்கைகளின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. தற்போது அறக்கட்டளை நிதிப் பொருளாளர் கட்டுப்பாட்டில் 17.40 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 4 மத்திய அறக்கட்டளைகளும், 29.08 கோடி ரூபாய் மதிப்புள்ள 885 மாநில அறக்கட்டளைகளும் உள்ளன. 2017-18-ஆம் ஆண்டில் அறக்கட்டளைகளிலிருந்து கிடைக்கப்பெற்ற வட்டி வரவுகளிலிருந்து **186** அறக்கட்டளை நிறுவனங்களுக்கு உதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் முதலியன வழங்கப்படுவதற்காக 21.67 இலட்சம் ரூபாய் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்படும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத் தணிக்கை

39. அரசாணை (பல்வகை) எண்.260, நிதி (ஓகுதீ) துறை, நாள்.05.10.2015- இன் படி உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் பணியாளர்களின் சந்தா மற்றும் நிர்வாகப் பங்களிப்பின் சரித் தன்மை உறுதி செய்யப்படுகிறது. 2016-2017 ஆம் ஆண்டு முடிய 385 ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியக் கணக்குகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதர உள்ளாட்சி அமைப்புகளான 11 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சி நிறுவனங்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட தரவுகளையும் அதன் சரித்தன்மையினையும், தணிக்கைத் துறையினரால் சரிபார்க்கப்பட்டு தணிக்கையில் அங்கீகரித்து ஒப்புதலளிக்கப்பட்டு வருகிறது.

## தணிக்கை நிலை

40. 2016-2017 ஆம் ஆண்டிற்கான 22 சதவீத கிராம ஊராட்சிகள், அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் தணிக்கை முடிவுற்றுள்ளது. 2017-2018- ஆம் ஆண்டிற்கான ஊராட்சி ஒன்றியங்களின் தணிக்கை 30.06.2018 இல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், மற்ற நிறுவனங்களின் 2017-2018 தணிக்கை 30.09.2018-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## தணிக்கைக் கட்டணம்

41. பல்கலைக்கழகத் தணிக்கைக்கு 100 சதவீதம் தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தணிக்கைக்கு 50 சதவீதம் தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், வேளாண் விற்பனைக் குழுக்கள் தணிக்கைக்கு மொத்தச் செலவினத்தில் 2 சதவீதமும் இத்துறையால் வசூலிக்கப்படுகிறது. 2017-2018 ஆம்

ஆண்டிற்கான கேட்புத் தொகையான 1,106.74 இலட்சம் ரூபாயில், மேற்படி நிறுவனங்களால் தணிக்கைக் கட்டணமாக 1,048.84 இலட்சம் ரூபாய் 2017-2018 ஆம் நிதியாண்டில் செலுத்தப்பட்டுள்ளது.

## தணிக்கைத் தடைகள் நீக்கம் சார்பான தொகை பிடித்தம்

42. கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள், சார்பான தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்த வகையில் 2017-2018 ஆம் ஆண்டில் 4,483.06 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

# கூட்டுறவு தணிக்கைத் துறை

43. சந்தானம் குழு மற்றும் நிர்வாக சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளின்படி கூட்டுறவு தணிக்கைத் துறையானது 17.06.1981 முதல் தனி துறையாக செயல்பட்டு வருகிறது. 1983 ஆம் வருடத்தின் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் 80-வது பிரிவின்படி பன்மாநில கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவு சங்கங்கள் தவிர, 14 நிர்வாக பதிவாளர்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அனைத்துக் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கையை மேற்கொள்வதே இத்துறையின் முக்கியமான பணியாகும்.

44. கீழ்க்காணும் நிர்வாகப் பதிவாளர்கள் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை கூட்டுறவு தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்கு உட்பட்டவையாகும்.

| வ. எண். | நிர்வாகப் பதிவாளர்களின் விவரம் | கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 8640 |
| 2. | கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையர் | 1400 |
| 3. | தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர் | 312 |
| 4. | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் | 797 |
| 5. | தலைமைச் செயல் அலுவலர், பனை பொருள் வளர்ச்சி வாரியம் | 118 |
| 6. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) | 866 |
| 7. | மீன் வளத் துறை இயக்குநர் | 1344 |
| 8. | கால்நடைப் பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவப் பணிகள் ஆணையர் | 110 |
| 9. | சர்க்கரைத் துறை ஆணையர் | 17 |
| 10. | வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) | 82 |
| 11. | வேளாண் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர். | 123 |
| 12. | பட்டு வளர்ச்சித் துறை, இயக்குநர் | 24 |
| 13. | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை இயக்குநர் | 123 |
| 14. | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை இயக்குநர் | 51 |
| | **மொத்தம்** | **14007** |

## கூட்டுறவு தணிக்கைத் துறையின் நோக்கம்:

45. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை தணிக்கை செய்தல், அச்சங்கங்களின் இருப்பு நிலைக் குறிப்பு மற்றும் இலாப நட்டக் கணக்குகள் முறையாக தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதிப்படுத்துவது கூட்டுறவு தணிக்கைத் துறையின் முதன்மைப் பணியாக உள்ளது. மேலும், கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், விதிகள் மற்றும் நடைமுறைகளின்படி செயல்படுவதை தணிக்கை செய்வதன் மூலம், உறுப்பினர்களுக்கு கூட்டுறவு தணிக்கைத் துறை உதவியாக இருந்து வருகிறது. மேலும், அரசின் நிதியுதவி எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகவே செலவிடப்பட்டு உறுப்பினர்களும், சமுதாயமும் முழுமையாகப் பயனடைந்துள்ளனர் என்பதையும் உறுதி செய்கிறது.

## நகர வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளுதல்

46. முனைவர் வைத்தியநாதன் குழுவின் அறிக்கையின் நடைமுறைக்குப் பிறகு, 2009 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகளின் சட்டப்பூர்வ தணிக்கை மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் பரிந்துரையின்படி 25 கோடி ரூபாய்க்கு மேல் வைப்பு தொகைகளைக் கொண்டுள்ள நகர கூட்டுறவு வங்கிகளின் சட்டப்பூர்வ தணிக்கை, பட்டயக் கணக்காளர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு தணிக்கைத் துறையைச் சேர்ந்த தணிக்கையாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட வங்கிகளின் உடன்நிகழ் தணிக்கைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## சட்ட பூர்வ தணிக்கை மற்றும் தணிக்கை கட்டணம்

47. கூட்டுறவு நிறுவனங்கள் / சங்கங்களின் சட்டபூர்வ தணிக்கை, தொடர் தணிக்கை அடிப்படையில்

மேற்கொள்ளப்படுகிறது. இம்மாதிரியான கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை 45 நாட்களுக்குள் முடிக்கப்பெறும். தொடர் தணிக்கை மேற்கொள்ளும் காலத்திற்கு தணிக்கைக் கட்டணம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு அரசுக்கு செலுத்தப்படுகிறது. 2017-2018 ஆம் ஆண்டில், 01.04.2017 முதல் 31.03.2018 முடிய 2.89 கோடி ரூபாய் தணிக்கைக் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது. அதிக அளவிலான வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பெரிய கூட்டுறவுச் சங்கங்களில், அடிப்படை விதி 127-ன் கீழ் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு அரசாணை (நிலை) எண்.340, நிதி (கூட்டுறவு தணிக்கை)த் துறை, நாள்.21.09.2012 -இன் படி அதற்கான கட்டணமாக 60 சதவீத சம்பளத் தொகை சங்கங்களிடமிருந்து மீள வசூலிக்கப்படுகிறது. 2017-2018 ஆம் ஆண்டில் அடிப்படை விதி கட்டணமாக 11.50 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது.

## தணிக்கை முன்னேற்ற நிலை

48. கடந்த ஐந்தாண்டுகளில் தணிக்கை முன்னேற்ற விவரம் பின்வருமாறு:-

| வ.எண் | தணிக்கை வருடம் | மொத்த சங்கங்கள் | தணிக்கை முடிக்கப் பெற்றவை மற்றும் அறிக்கைகள் வழங்கப்பட்டவை | நிலுவை சங்கங்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2012-2013 | 16554 | 16017 | 537 |
| 2 | 2013-2014 | 15955 | 15338 | 617 |
| 3 | 2014-2015 | 14644 | 14000 | 644 |
| 4 | 2015-2016 | 14017 | 13208 | 809 |
| 5 | 2016-2017 | 14007 | 12699 | 1308 |

2016-2017 ஆம் ஆண்டிற்கான 14,007 மொத்த சங்கங்களில் 01.04.2017 முதல் 31.03.2018 வரையிலான காலத்தில் 12,699 கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சங்கங்களின் தணிக்கை 30.09.2018 க்குள் முடிக்கப்படும். தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம்

1983 -ன் பிரிவு 81 -ன் கீழ் விசாரணையில் உள்ளவை, வணிக குற்றப் புலனாய்வுத் துறை விசாரணையில் உள்ளவை, நீதிமன்ற வழக்கு காரணமாக புத்தகங்கள் கிடைக்கப் பெறாமை, மற்றும் கணக்கு எழுதப்படாமல் உள்ளவை ஆகிய காரணங்களினால் 2016-2017 ஆம் ஆண்டுவரை சில சங்கங்களின் தணிக்கை முடிக்கப்படாமல் உள்ளது. இவற்றை விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**தனி அறிக்கைகள்**:- (Special Reports)

49. தணிக்கையில் கடுங்குறைகள் காணும்போது அது தொடர்பான அனைத்து விவரங்களும் தனி அறிக்கைகள் மூலம் சம்பந்தப்பட்ட நிர்வாகப் பதிவாளருக்கு உடன் தெரிவிக்கப்படுகிறது. 2016-2017 ஆம் ஆண்டு முடிய உள்ள காலகட்டத்தில் 42.53 கோடி ரூபாய் அளவிலான 371 தனி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 01.04.2017 முதல் 31.03.2018 முடிய உள்ள காலத்திற்கு 59.57 கோடி ரூபாய் அளவிலான 569 தனி அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டுள்ளன.

## புதிய இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர்களை பணி நியமனம் செய்தல்:

50. இத்துறை பணியாளர்கள் எண்ணிக்கையில் மறுகட்டமைப்பு செய்து, பணியிடங்களை நிலையிறக்கம் செய்வதன் மூலம் பணியிடங்களை மறுசீரமைப்பு செய்துள்ளது. காலியாகவுள்ள துவக்க நிலை பணியிடமான இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பணி நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கூட்டுறவு தணிக்கை அலுவலர் பணியிடங்கள் உதவி இயக்குநர் பணியிடங்களாக நிலை உயர்வு

51. அரசாணை (நிலை) எண்.159, நிதி (கூட்டுறவு தணிக்கை)த் துறை, நாள்.01.06.2017- இன் படி 20 கூட்டுறவு தணிக்கை அலுவலர் பணியிடங்களை, கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் பணியிடங்களாக நிலை உயர்வு செய்யப்பட்டுள்ளது. இது இத்துறைப் பணியாளர்களுக்கு பதவி உயர்விற்கான வாய்ப்பினை அதிகரித்துள்ளது.

**தணிக்கையாளர்களின் திறன் மேம்படுத்துதல்:**

52. தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரம் இவற்றை மேம்படுத்த பல்வேறு வகையான பயிற்சிகளும், வருடந்தோறும் மூன்று நாட்களுக்கு புத்தாக்கப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகிறது.

# சிறுசேமிப்புத் துறை

53. குடிமக்களிடம் சிக்கனம் மற்றும் சேமிக்கும் பழக்கத்தினை ஊக்குவித்தலே சிறுசேமிப்புத் திட்டத்தின் தலையாய நோக்கமாகும். இந்தியாவில் சிறுசேமிப்புத் திட்டங்கள் தனிநபர் வீட்டுச் சேமிப்பிற்கு முக்கிய ஆதாரமாக விளங்குகின்றது. சிறு முதலீட்டாளர்களையும் சேமிப்பு இயக்கத்தின்கீழ் கொணர்ந்து, அதன் மூலம் அவர்களின் முதலீட்டிற்கு அதிக பாதுகாப்பு அளித்து, அதேநேரத்தில் முதலீட்டின்மீது கணிசமான வட்டி கிடைப்பதற்கும் உறுதி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டு மக்களிடம் சிக்கனம் மற்றும் சேமிப்பின் பயன்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, அஞ்சல் துறையின் வாயிலாக செயல்படுத்தப்பட்டுவரும் சிறுசேமிப்புத் திட்டங்களை ஊக்குவிக்கும் பணியில் மாநில சிறுசேமிப்பு ஆணையரகம் ஈடுபட்டு வருகின்றது.

54. ஒரு மாநிலத்திற்குள் திரட்டப்பட்ட நிகர சிறுசேமிப்பு வசூலானது, கடந்த 2015-16-ஆம் ஆண்டுவரையில் அந்த மாநிலத்திற்கே முழுவதுமாகவோ அல்லது ஒரு

பகுதியாகவோ நீண்டகாலக் கடனாக மத்திய அரசால் வழங்கப்பட்டு வந்தது. எனினும், தேசிய சிறுசேமிப்பு நிதியத்தின் கடன் பெறுவதற்கு மாநிலங்களை வற்புறுத்தக்கூடாது என்ற பதினான்காம் நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படையிலும் தமிழக அரசின் கோரிக்கையை ஏற்றும், சிறுசேமிப்புக் கடன் பெறுவதிலிருந்து மாநிலத்திற்கு 2016-17-ஆம் ஆண்டு முதல் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## சிறுசேமிப்புத் திட்டங்கள்

55. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரின் தேவைகளுக்கு ஏற்றவகையில் பலவிதமான சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதத்தினை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களின் முதல் நாளில் மாற்றியமைத்து மத்திய அரசு அறிவிப்பினை வெளியிடுகிறது.

56. இத்தகவல்கள் யாவும் தற்போது சிறுசேமிப்புத் துறையின் இணையதளமான www.tnsmallsavings.org-இல் வெளியிடப்பட்டு அவ்வப்போது மேம்படுத்தப்படுகின்றன. தற்போது 01.01.2018 முதல் நடைமுறையில் உள்ள சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதங்கள் பின்வருமாறு:-

| வ. எண். | திட்ட விவரம் | 01.01.2018 முதல் வட்டி விகிதம் (%) | வட்டி கூட்டுதல் கால இடைவெளி |
|---|---|---|---|
| 1 | அஞ்சலக சேமிப்புக் கணக்கு (POSA) | 4.0 | ஆண்டுக்கு ஒரு முறை |
| 2 | கால வைப்பீடு (POTD) | | |
| அ | 1 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி | 6.6 | காலாண்டுக்கு ஒரு முறை |
| ஆ | 2 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி | 6.7 | காலாண்டுக்கு ஒரு முறை |
| இ | 3 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி | 6.9 | காலாண்டுக்கு ஒரு முறை |
| ஈ | 5 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி | 7.4 | காலாண்டுக்கு ஒரு முறை |
| 3 | அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் (PORD) (5 ஆண்டுகள்) | 6.9 | காலாண்டுக்கு ஒரு முறை |

| வ. எண். | திட்ட விவரம் | 01.01.2018 முதல் வட்டி விகிதம் (%) | வட்டி கூட்டுதல் கால இடைவெளி |
|---|---|---|---|
| 4 | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (SCSS) (5 ஆண்டுகள்) | 8.3 | காலாண்டுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது |
| 5 | அஞ்சலக மாதாந்திர வருவாய் திட்டம் (POMIS) (5 ஆண்டுகள்) | 7.3 | மாதத்திற்கு ஒரு முறை வழங்கப்படுகிறது |
| 6 | தேசிய சேமிப்புப் பத்திரம் (NSC VIII வெளியீடு) (5 ஆண்டுகள்) | 7.6 | ஆண்டுக்கு ஒரு முறை |
| 7 | பொது வருங்கால வைப்பு நிதி/ பொன் மகன் பொது வைப்பு நிதி (15 ஆண்டுகள்) | 7.6 | ஆண்டுக்கு ஒரு முறை |
| 8 | கிஸான் விகாஸ் பத்திரம் (KVP) | 7.3 (118 மாதங்களில் முதிர்வடையும்) | ஆண்டுக்கு ஒரு முறை |
| 9 | சுகன்யா சம்ரிதி கணக்கு (செல்வ மகள் சேமிப்புத் திட்டம்) | 8.1 | ஆண்டுக்கு ஒரு முறை |

## செல்வமகள் சேமிப்புத் திட்டம்

57. செல்வமகள் சேமிப்புத் திட்டம் என்ற பெண் குழந்தைகளுக்கான சேமிப்புத் திட்டத்தை மத்திய அரசு 03.12.2014 முதல் அறிமுகப்படுத்தி உள்ளது. 10 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்காக மட்டும் பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ், அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஓர் ஆண்டில் அதிகபட்சமாக 1.5 இலட்சம் ரூபாய் வரை வைப்பீடு செய்யலாம். இத்திட்டத்திற்கான தற்போதைய வட்டி விகிதம் 01.01.2018 முதல் 8.1 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## பொன்மகன் பொதுவைப்பு நிதி

58. செல்வமகள் சேமிப்புத் திட்டத்திற்கு கிடைத்த வரவேற்பையொட்டி, ஆண் குழந்தைகளும் பயன்பெறும் வகையில் "பொது வருங்கால வைப்பு நிதித் **(PPF)**" திட்டமானது, "பொன்மகன் பொதுவைப்பு நிதி" என பெயரிடப்பட்டு இந்திய அஞ்சல் துறை மூலம் 04.09.2015 முதல் மறுபடியும் துவக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 10 வயதிற்குட்பட்ட ஆண் குழந்தைகள், அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் மூலமும், 10 வயதிற்கு மேற்பட்டவர்கள் தாங்களாகவும் கணக்குத் துவக்கலாம். ஓர் ஆண்டில் அதிகபட்சமாக 1.5 இலட்சம் ரூபாய் வரை வைப்பீடு செய்ய வாய்ப்புள்ள இத்திட்டத்திற்கு 01.01.2018 முதல் 7.6 சதவீத வட்டி விகிதம் வழங்கப்படுகிறது.

## மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம்

59. 01.01.2018 முதல் 5 ஆண்டுகள் மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டத்திற்கு 8.3 சதவீத வட்டி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வட்டி வழங்கப்படும் கணக்கினை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கும் வசதியும் உண்டு. கணக்கினை முன்கூட்டியே முடிக்கும்பொழுது ஓராண்டிற் பிறகு 1.5 சதவீதமும், இரண்டு ஆண்டிற்குப் பிறகு ஒரு சதவீதமும் முதலீட்டுத் தொகையில் பிடித்தம் செய்து வழங்கப்படும்.

## சிறுசேமிப்பு வசூல் விவரங்கள்

60. சிறுசேமிப்புத் திட்டங்களின் வாயிலாக தமிழகத்தில் 2013-14 முதல் 2017-18 வரையிலான நிதியாண்டுகளில்

திரட்டப்பட்ட நிதி வசூல் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

(ரூபாய் கோடியில்)

| வ.எண். | நிதியாண்டு | இலக்கு | மொத்த வசூல் | முதிர்வு மற்றும் திரும்பப் பெறப்பட்ட தொகை | நிகர வசூல் |
|---|---|---|---|---|---|
| 1 | 2013 - 14 | - - | 9,624.19 | 10,354.97 | -730.78* |
| 2 | 2014 - 15 | - - | 10,936.37 | 12,020.49 | -1,084.12* |
| 3 | 2015 - 16 | - - | 17,259.82 | 15,314.41 | 1,945.41 |
| 4 | 2016 - 17 | - - | 20,737.29 | 17,227.19 | 3,510.10 |
| 5 | 2017 - 18 | - - | 25,257.16 | 17,301.21 | 7,955.95 |

(*2013-14 மற்றும் 2014-15-ஆம் ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட தொகையைவிட திரும்ப அளிக்கப்பட்ட தொகை அதிகம் என்பதால் நிகர வசூல் எதிர்மறை குறியீட்டில் உள்ளது)

## முகவரமைப்பு மற்றும் வெகுமதிகள்

## முகவரமைப்பு

61. சிறுசேமிப்புத் தொகையைத் திரட்டுவதற்காக மாநிலம் முழுவதும் முகவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிப்பதிலும் வசூல் பணிகளிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். இதில் மகளிர் முகவர் (MPKBY) திட்டத்தின் கீழ் அஞ்சலக தொடர் வைப்புத்

திட்டத்திற்கு (PORD) முன்னுரிமை அளித்து மகளிர் மட்டுமே சிறுசேமிப்பு முகவர்களாக நியமனம் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு முழுவதும் தற்பொழுது, அதாவது 31.03.2018 வரை மொத்தம் 17,152 பதிவு பெற்ற முகவர்கள் பணியாற்றி வருகின்றனர். அந்த விவரங்கள் பின்வருமாறு:-

| வ. எண். | முகவர்களின் வகை | மொத்த முகவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் (SAS) | 3,530 |
| 2 | மகளிர் முகவர் திட்டம் (MPKBY) | 13,622 |
| **மொத்தம்** | | **17,152** |

## வெகுமதிகள்

62. ஒருசில சிறுசேமிப்புத் திட்டங்களின்கீழ் முகவர்கள் மூலமாக திரட்டப்படும் முதலீடுகளுக்கு மத்திய அரசு தரகுத் தொகை வழங்குகிறது. சிறுசேமிப்பு முகவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் பொதுமக்களின் மனங்களில் சேமிக்கும் பண்பை வளர்ப்பதற்கும், சிறுசேமிப்பில் சிறந்து விளங்கும் மகளிர் (MPKBY) முகவர்களுக்கு ஊராட்சி

ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் மற்றும் நிலை முகவர்களுக்கு (SAS) மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசு ரொக்கப் பரிசுகள் மற்றும் கேடயங்களை வழங்கி வருகின்றது. 2017-2018 ஆம் ஆண்டிற்கு 709 முகவர்களுக்கு 9,68,000 ரூபாய் அளவில் ரொக்கப் பரிசுகளும் கேடயங்களும் வழங்கப்பட்டுள்ளன.

## உலக சிக்கன நாள்

63. சிறுசேமிப்புத் துறையால் உலக சிக்கன நாள் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 30-ஆம் நாள் அனுசரிக்கப்படுகிறது. தமிழகமெங்கும் சிக்கனம் மற்றும் சிறுசேமிப்புத் திட்டங்களில் சேமித்தல் ஆகிய இரண்டு பழக்கங்களை ஊக்கப்படுத்துவதிலும், சிறுசேமிப்பு முதலீட்டாளர்கள் மற்றும் முகவர்களின் குறைகளைக் இணையதளம் (www.tnsmallsavings.org) மூலமாகக் களைவதிலும் இத்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் உலக சிக்கன நாள் விழாவின்போதும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களும், சென்னைப்

பெருநகரில் சென்னைப் பெருநகர மாநகராட்சி ஆணையாளரும், பொதுமக்களிடையே சிறுசேமிப்புத் திட்டங்களை கொண்டு செல்வதில் முக்கியப் பங்காற்றுகின்றனர். அதன்படி, மாணாக்கர்களிடையே கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, நடனப் போட்டி மற்றும் நாடகப் போட்டிகள் நடத்தப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட மாணாக்கர்களுக்கு சிறுசேமிப்புத் துறை மூலம் பரிசு அளிக்கப்படுகின்றது. மேலும், 2017-18-ஆம் ஆண்டில் மாநில அளவிலும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்புடன் சென்னையிலும் விழா நடத்தப்பட்டது.

## விளம்பரம்

64. சிறுசேமிப்புத் துறை, சென்னை மற்றும் மாவட்டங்களில் நடத்தப்படும் பொருட்காட்சிகளில் கலந்துகொண்டு சிறுசேமிப்பு அரங்கு அமைத்தும், பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் வழங்கியும் விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றது. மேலும், மாவட்டங்களில் வட்டார அளவில் பிரச்சார நாடகங்கள் மூலமும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. இதுதவிர

பெரம்பலூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சி மற்றும் வருடாந்திர பொருட்காட்சிகளிலும் இத்துறை பங்கேற்றது. இதற்கென 2017-2018 ஆம் ஆண்டிற்கு மொத்தமாக 14.27 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

# அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

65. நிதி தொடர்பான தகவல்களை மிகவும் பயனுள்ள வகையில் பகுப்பாய்வு செய்யவும், மாநிலத்தின் கணக்குகளை மின்னணுத் தகவல் தொகுப்பு உபகரணங்கள் மூலம் பகுப்பாய்வு செய்து சிறப்பான முறையில் வரவு செலவினைத் திட்டமிடும் நோக்குடன், 1971ஆம் ஆண்டு மத்திய வரவு செலவுத் திட்ட விவரங்கள் தொகுப்பு மையம் ஒன்றை அரசு தோற்றுவித்தது. இந்த மின்னணு தகவல் தொகுப்பு வசதிகளைப் பயன்படுத்தி, அரசுத் துறைகளின் பலதரப்பட்ட செயல்பாடுகளுக்குத் தேவையான வகையில், அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் 1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நிர்வாக வசதிகளுக்காக 1975 ஆம் ஆண்டு மேற்கண்ட இரண்டு பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் ஏற்படுத்தப்பட்டது. தற்போது இந்த மையம் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது.

1. புதிய ஓய்வூதியத் திட்டம்

2. பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்

3. உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

4. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி

## புதிய ஓய்வூதியத் திட்டம்

66. கடந்த 01.01.2004 -க்கு பிறகு பணியில் சேர்ந்த அகில இந்தியப் பணி அலுவலர்களுக்குப் புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கான கணக்கு எண்கள் இதுநாள் வரை **177** அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 153 அகில இந்தியப் பணி அலுவலர்களுக்கு, 2016-2017 ஆம் ஆண்டிற்கான கணக்குச் சீட்டுகள் ஜூன் 2017-ல் பதிவேற்றம் செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட அலுவலர்களே கணக்குச் சீட்டுகளைப் பதிவிறக்கம் செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. புதிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வரும் அகில இந்தியப் பணி அலுவலர்களின் தொகைகளை

நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் நிறுவனத்திற்கு மாற்றம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

67. அரசு ஆணை நிலை எண். 201 நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 21.05.2009 இன் படி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் / நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்கள் / நகராட்சிப் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டப் பணிகள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசு ஆணை நிலை எண்.463, நிதி (ஓ.கு.தீ.) துறை, நாள் 27.12.2013-இன் படி, மாநிலக் கணக்காயரால் பராமரிக்கப்பட்டு வந்த அரசுப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் இத்துறைக்கு 01.01.2014 முதல் மாற்றம் செய்யப்பட்டது. அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் 31.03.2018 வரை வழங்கியுள்ள பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் குறியீட்டு எண்கள் குறித்த விவரம் பின்வருமாறு:

| தொடர் எண் | பணியாளர் விவரம் | வழங்கப்பட்ட குறியீட்டு எண்கள் |
|---|---|---|
| i. | அரசுப் பணியாளர்கள் | 3,81,125 |
| ii. | நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் / ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி ஒன்றியப் பள்ளி பணியாளர்கள் | 96,776 |
| iii. | உள்ளாட்சித் துறை பணியாளர்கள் | 28,040 |
| | மொத்தம் | **5,05,941** |

68. 2016-17 வரை, 4,09,948 அரசுப் பணியாளர்கள் / நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் / ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கணக்குச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் மீதமுள்ள 95,993 சந்தாதாரர்களின் வரவினத் தொகைகள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தில் சரிபார்க்கப்பட்டு 2017-2018 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்குத்தாள்களுடன் சேர்த்து வெளியிடப்படும்.

## இறுதி கணக்குத் தாள் வழங்குதல்

69. அரசாணை நிலை எண்.59, நிதி (ஓ.கு.தீ.) துறை, நாள் 22.02.2016-இன் படி, 6,822 பணியாளர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்கின் இறுதி கணக்குத் தாள் வழங்குவதற்கு கணக்கு மற்றும் கருவூலத் துறை பரிந்துரை செய்துள்ளது. அவற்றினை இத்துறை கூர்ந்தாய்வு செய்து, 6,284 நபர்களுக்குரிய இறுதி கணக்குத் தாள்கள் ஒப்பளிப்பு வழங்கக் கோரி கருவூலக் கணக்கு துறைக்கு அனுப்பப்பட்டது. அதன்படி, 243.07 கோடி ரூபாய் உரிய நபர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

## உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

70. உள்ளாட்சி அமைப்புகளில் சுமார் 28,040 நிலையாக்கப்படாத பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணிபுரிந்து வருகிறார்கள். மேற்கண்ட பணியாளர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் தொடர்புடைய நிதி ஆண்டுகளுக்கு கணக்குத்தாட்கள் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்

71. அரசாணை (நிலை) எண்.108, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, 19.04.2010-ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களின் பொது வருங்கால வைப்பு நிதி குறித்த பணிகள், அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. மேற்கண்ட திட்டத்தில் 31.03.2018 அன்றுள்ளபடி 2,41,925 சந்தாதாரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அரசாணை (நிலை) எண்.53, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 20.07.2015 -இல் இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டப் பணியாளர்களிடமிருந்து ஆகஸ்ட் 2015 முதல்

வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்யப்படுகிறது. ஆகஸ்ட் 2015 முதல் பிப்ரவரி 2017 வரை மாவட்டக் கருவூலங்களிலிருந்து பெறப்பட்ட வரவினப் பட்டியல்கள் விவரம் அனைத்தும் பதிவு செய்யும் பணிகள் முடிக்கப்பட்டு, 2015-2016 மற்றும் 2016-2017 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குத்தாள்கள் தொகுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## 2017-2018 ஆம் ஆண்டில் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு ஈடுசெய்த தொகை:

72. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் 2017-2018 ஆம் ஆண்டில் அரசு பணியாளர்கள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகை 1,848.24 கோடி ரூபாயும், அதற்கீடான அரசின் பங்களிப்புத் தொகையும், அவற்றிற்கான வட்டியும், பொதுக் கணக்கில் (Public Account) “8342” என்ற பெருந்தலைப்பின் கீழ் பேணப்படும் சம்பந்தப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்குகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

# அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறை

73. அரசு வணிகத் திட்டங்கள் தணிக்கைத் துறை 1969 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, அரசாணை எண் 598, நிதி (உள்ளாட்சி நிதி)த் துறை, நாள் 03.08.1992- இன் படி நடைமுறையில் இருந்த உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மற்றும் அரசு வணிகத் திட்டங்கள் துறை, பணி மற்றும் கடமைகள் அரசுத் துறைகளிலும் உட்தணிக்கை மேற்கொள்ளும் வகையில் திருத்தியமைக்கப்பட்டு, இத்துறை அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறையாக தற்போது செயல்பட்டு வருகிறது. பின்வரும் வாரியங்கள் மற்றும் நிறுவனங்களின் தணிக்கை, அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 74. **சட்டபூர்வ நிறுவனங்களின் தணிக்கை**

| தொடர். எண் | நிறுவனத்தின் பெயர் | தணிக்கை முடிக்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|
| (I) | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | 2015-16 |
| (II) | தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் | 2015-16 |
| (III) | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 2015-16 |
| (IV) | தமிழ்நாடு வக்ஃபு வாரியம் | 2014-15 |
| (V) | தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் | 2015-16 |
| (VI) | சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | 2015-16 |

மேற்கண்ட சட்டபூர்வ வாரியங்களின் ஆண்டுத் தணிக்கை (வ.எண். IV & V நீங்கலாக) உடனிகழ் தணிக்கையாக மேற்கொள்ளப்பட்டு, அத்தணிக்கை அறிக்கைகள், நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் வெளியிடப்படுவதுடன் அவற்றிலுள்ள பல்வேறு கடுங்குறைபாடுகள் குறித்த விவரங்கள் அரசுக்கும்

தமிழ்நாடு சட்டசபையின் பொது நிறுவனங்கள் குழுவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படுகிறது.

## சட்ட வரையறைக்கு உட்படாத நிறுவனங்களின் தணிக்கை

75. கீழ்க்கண்ட, சட்ட வரையறைக்கு உட்படாத நிறுவனங்களின் தணிக்கை இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| தொடர். எண் | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை / நிறுவனங்கள் |
|---|---|---|
| (I) | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 97,333 |
| (II) | வேளாண்மை விரிவாக்க மையங்கள் | 881 |
| (III) | எடையளவு நிறுவனங்கள் | 333 |
| (IV) | ஆண்டிற்கு 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல் தொடர் மானியம் மற்றும் 1.20 இலட்சம் ரூபாய்க்கு மேல் தொடரா மானிய உதவி பெறும் நிறுவனங்கள் | 687 |

இத்துடன் கீழ்க்கண்ட அமைப்புகளின் தணிக்கையும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்
2. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்
3. தமிழ்நாடு விவசாய தொழிலாளர் மற்றும் விவசாயிகள் நல (சமூக பாதுகாப்பு)த் திட்டம்
4. நாட்டுப்புற கலைஞர் நல வாரியம்
5. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம்
6. 15 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள்
7. இதர பல்வகை நிறுவனங்களின் தணிக்கை

## 76. சிறப்புத் தணிக்கை

1) அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களின் பணியமைப்பு தொடர்பான சிறப்புத் தணிக்கையானது அரசுக் கடித எண்.17905/ஊ1/2015,

உயர்கல்வித் துறை, நாள்.19.09.2015 -இன் படி இத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பான இறுதித் தணிக்கை அறிக்கையானது இவ்வலுவலக ந.க.எண்.13304/ஈ2/2015-1, நாள்.28.08.2017 அன்று அரசுக்கு அனுப்பப்பட்டது.

2) அரசாணை (நிலை) எண்.148 பள்ளிக் கல்வித் (ஜிஜி1) துறை, நாள்.20.04.2016- இன் படி அரசுத் தேர்வுகள் துறையால் நடத்தப்பெறும் மேல்நிலை மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் உள்ளிட்ட அனைத்து தேர்வுகளுக்கும் மென்பொருள் தயாரித்திட ELCOT நிறுவனம் மூலம் மென்பொருள் வடிவமைப்பாளர்களுக்கு ஏற்படும் செலவினம் தொடர்பான தணிக்கை இத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

3) அரசாணை (நிலை) எண்.135, நிதி (உ.நி)த் துறை, நாள்.23.05.2017- இன் படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகையின் தணிக்கையானது 2015-16 முதல்

இத்துறையினால் மேற்கொள்ளப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4) அரசாணை (நிலை) எண்.274, நிதி (உ.நி)த் துறை, நாள்.19.09.2017- இன் படி அண்ணா மேலாண்மை நிறுவனத்தின் தணிக்கையானது 2016-17 முதல் இத்துறையினால் தொடர்ந்து மேற்கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

5) சமூகப் பாதுகாப்புத் துறை, இயக்குநர் அலுவலக கடிதம் ந.க.எண்.002/உ1/2016, நாள்.10.05.2016 மற்றும் 29.07.2016- இன் படி மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலகங்களின் தணிக்கை, இத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டு, 2012-13 ஆம் ஆண்டு முதல் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## தணிக்கைச் சான்று

77. மானிய உதவி பெறும் நிறுவனங்களுக்கு மானியத் தகுதிச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தணிக்கைக்கு உட்பட்ட வாரியங்களில்

பணியாற்றும் பணியாளர்களின் ஓய்வூதியக் கருத்துருக்கள் மற்றும் வருங்கால வைப்பு நிதி கணக்கு முடிப்புகளுக்கு தணிக்கைச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது.

## இதர பணிகள்

78. அரசின் குறிப்பான ஆணையின்படி தற்போது 19 அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகள் இத்துறையின் உதவி இயக்குநர்கள் / ஆய்வர்கள் நிலையில் உள்ள அலுவலர்களால் மேற்பார்வையிடப்படுகின்றன.

மேலும், கீழ்க்காணும் தணிக்கை பணிகள் மற்றும் ஏனைய பணிகளையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது.

1. நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களின் நாட்டு நலப்பணித் திட்டம்.
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் மருத்துவ நல நிதித் திட்டம்.
3. குடும்ப பாதுகாப்பு நிதி.
4. மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதி.

5. அரசு உதவிபெறும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகளின் கணக்குகள் தணிக்கை.

6. அனைத்து தலைமைச் செயலகத் துறைகள்.

7. அனைத்து அரசுத்துறை பணியாளர்களின் ஊதிய நிர்ணயத் தணிக்கை.

8. அரசுத் துறைகளில் பணிபுரியும் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்.

9. சட்டமன்ற மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் செலவினம்.

## தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை

79. தணிக்கையின்போது காணப்படும் கடுங்குறைபாடுகள் கொண்ட பத்திகளின் சுருக்கம் அவ்வப்போது அந்தந்த துறைத் தலைமைக்கும், அரசின் துறைச் செயலாளரின் கவனத்திற்கும் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

## தணிக்கைக் கட்டணம்

80. தணிக்கை கட்டணத்திற்கான கேட்பு, உண்மைச் செலவினம் அல்லது சராசரி செலவுகளின் அடிப்படையில் எழுப்பப்படுகிறது. வக்ஃபு நிறுவனங்களைப் பொறுத்தவரை, நிகர வருவாயில் 1.5 சதவீத அடிப்படையில், தணிக்கை கட்டணக் கேட்பு இத்துறையால் எழுப்பப்படுகிறது. தணிக்கைக் கட்டணம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது.

**ஓ.பன்னீர்செல்வம்**
**துணை முதலமைச்சர்**